| கணக்கு இலக்கம் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

**தேசிய சேமிப்பு வங்கி**

## என்எஸ்பி பென்சன்+ கணக்கு

## நிபந்தனைகள்

1. 16 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு இலங்கைப் பிரஜையும் இத் திட்டத்தின் கீழ் கணக்கொன்றை ஆரம்பிக்கலாம்.
2. இலங்கையில் வதியாத பிரஜைகளும் கணக்குகளை ஆரம்பிக்கலாம். ஸ்ரேலிங் பவுண், ஐஅடா, அல்லது யூரோ நாணயங்களில் வைப்புக்களைச் செய்யலாம். கணக்கின் வருவாய்கள் இலங்கை ரூபாய்களில் கொடுக்கப்படும்.
3. கணக்கொன்றின் மிகக்குறைந்த ஆரம்பவைப்பு ரூபா1000/-ஆயினும் கணக்கு ஆரம்பிக்கப் பட்ட பின்னர் எந்தவொரு தொகையையும் எந்த நேரத்திலும் காலத்திற்குக் காலம் அல்லது முழுத்தொகையாக வைப்புச் செய்யலாம்.
4. வைப்பாளர் ஓய்வூதியம் பெறுவதற்கு 55வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.55வயதைப் பூர்த்தி செய்த பின்னரும் அங்கத்தினர் ஒருவர் ஓய்வூதியம் பெறுவதற்கான திகதியை பிற்போடுவதற்கு விரும்புவாராயின் 60வயது வரை அவ்வாறு செய்யலாம். அவர் விரும்பின் மேலதிகமாக பணத்தை வைப்புச் செய்து கணக்கு மீதியை அதிகரிக்கவும் முடியும்.
5. வைப்பாளரின் வைப்புக் கால முடிவின்போது, மிகக்குறைந்த மீதியாக ரூபா 100,000/- அவரின் கணக்கில் மீதியாக இருக்குமானால் வைப்பாளர் ஓய்வூதியம் பெற தகுதியுடை யவராவார். ரூபா100,000/-இற்கும் குறைவான தொகை கணக்கு மீதியாக இருக்குமானால், வைப்புக்கால முடிவின்போது அத்தொகை வைப்பாளரருக்கு மீளளிக்கப்படும்.
6. வைப்பாளர் 55 வயதை எய்தும்வரை அவரது கணக்கில் உள்ள பணத்தை அல்லது அதன் வட்டியை மீளெடுக்க அனுமதிக்கப்படமாட்டார்.

   (i) எவ்வாறாயினும், விசேட நிலமைகளில் பொதுமுகாமையாளரின் அங்கீகாரத்துடன் கணக்கை மூட முடியும்.
   (ii) கணக்கு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் கணக்கு மூடப்படுமாயின், அவ்வாறான கணக்கு எந்தவொரு வட்டிக்கும் உரித்துப் பெறமாட்டாது.
   (iii) கணக்கு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 4வருடங்களின் பின்னர் கணக்கு மூடப்படுமாயின், கணக்கு ஆரம்பிக்கப்பட்ட 4வது வருடத்திலிருந்து, வங்கியின் சாதாரண சேமிப்பு வீதத்தில் வட்டி பெறுவதற்கு அக்கணக்கு உரித்துடையதாகவிருக்கும்.
   (iv) கணக்கு அவ்வாறு மூடப்படுமாயின் வங்கியினால் வழங்கப்பட்ட மருத்துவ கட்டண மீளளிப்பும் ஏனைய ஊக்குவிப்புக்கள் போன்ற கொடுப்பனவுகளும் கழிக்கப்பட்டதன் பின்னர் கணக்கில் உள்ள வருவாய்கள் கணக்கு வைப்பாளருக்குக் கொடுக்கப்படும்.
   (v) கணக்கு மூடப்பட்ட திகதியில் நிலவும் சேமிப்பு வீதம் கணக்கின் வட்டி வீதமாக அமையும்.
   (vi) கணக்கொன்று பகுதியாக மூடப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

7. ஓய்வூதியத்தை பின்வரும் முறைகளில் பெற்றுக்கொள்ள முடியும்

   (i) ஆயுட் காலம் முழுவதற்குமான ஓய்வூதியம் அல்லது
   (ii) குறிக்கப்பட்ட ஒரு காலத்திற்கு அல்லது
   (iii) மொத்தமாக ஒரு தொகையாக, அல்லது
   (iv) மேலேயுள்ள எவையும் கூட்டாகச் சேர்க்கப்பட்டு
   (v) ஆயுட்கால ஓய்வூதியமாயின் ஓய்வூதிய காலத் தொகை ஒவ்வொரு 06 மாதத்திற்கும் ஒரு முறை இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் மாதாந்த நிறையேற்றிய வைப்பு வீத வைப்பு வீதத்தின் (AWDR) சராசரி அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும்.
      (அ) இலங்கை மத்திய வங்கி (AWDR) வெளிப்படுத்தலை இடை நிறுத்தி வைக்கும் சந்தர்ப்பங்களில், வங்கி முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப் படும் பொருத்தமான ஒருவீதத்தில் வட்டிவீதம் கணக்கிடப்படும்.
      (ஆ) அங்கத்தவர் ஒருவரின் இறப்பின் பின்னர் கணக்கிலுள்ள வைப்பு மீதி அவரது நியமனத்தருக்கு வழங்கப்படும்.

| கணக்கு இலக்கம் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(vi) குறிக்கப்பட்ட ஒரு காலத்திற்கு மட்டும் ஓய்வூதியம் வழங்கப்படும்போது கணக்கு மீதி பூஜ்யத்திற்கு கொண்டு வரப்படுவதால் அக்காலத்திற்குப் பிறகு பணம் வழங்கப் படமாட்டாது.

(அ) அங்கத்தவரது மரணம், குறிப்பிட்ட வைப்புக் கால முதிர்வின் முன்னர் நிகழுமாயின் கணக்கிலுள்ள மீதி நியமனத்தர்/கள்இற்கு வரவிடப்படும்.

8. வைப்பாளரின் கணக்கு மீதி, குறிப்பிட்ட திகதியில் நிலவும் சராசரி நிறையேற்றிய வைப்பு வீத சராசரி மற்றும் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படும் காலம் என்பவற்றின் அடிப்படையில் குறிக்கப்பட்ட காலத்திற்கான ஓய்வூதியத் தொகை தீர்மானிக்கப்படும்.

9. ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும்போது ஓய்வூதியம் பெறுகின்ற காலத்தில் அல்லது ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளும் முறை என்பவற்றில் மாற்றங்கள் செய்வதற்கு வைப்பாளருக்கு ஒருமுறை மட்டுமே அனுமதி வழங்கப்படும். அவ்வாறான நிலமையில் வட்டி கணக்கிடும்போது, வைப்பாளர் 55 வயதைப் பூர்த்தி செய்தபோது நிலவிய வட்டி வீதம் அல்லது மாற்றம் செய்யும்போது நிலவும் நிறையேற்றிய வைப்புவீத சராசரி என்பவற்றில் குறைவானதாக காணப்படும் வட்டி வீதம் கணக்கிடுவதற்குப் பொருத்தமான வட்டி வீதமாகவிருக்கும்.

10. இக் கணக்குகளின் ஒவ்வொரு ரூபா 10,000/-மும் அதன் பகுதிகளும் இலங்கை மத்திய வங்கியினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிறையேற்றிய வைப்பு வீத சராசரியையும் வங்கியின் விளிம்பு வட்டி வீதத்தையும் உள்ளடக்கிய வட்டிக்கு உரித்துப் பெறும் அதன் மிகுதித் தொகைகளும் ரூபா 10,000/-இற்குக் குறைவான தொகைகளும் அல்லது ரூபா 10,000/- இனால் சமமாக வகுக்க முடியாத தொகைகள் சேமிப்பு கணக்கு களுக்கு ஏற்புடைய வட்டி வீதத்துடன் விளிம்பு வட்டி வீதத்தையும் சேர்த்து வட்டியாகப் பெறும். இவ் வைப்புக்களின் வட்டி வீதம் 6 மாதங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படுவதுடன் வங்கியினால் ஏற்றவாறு வெளிப்படுத்தவும்படும்.

11. நியமனத்தர்/களை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. வைப்பாளர் மரணமடையும்போது அவரது கணக்கில் உள்ள மீதி நியமனத்தர்/களுக்குக் கொடுக்கப்படும். எவ்வாறாயினும் நியமனத்தர்/கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வேறு நன்மைகளுக்கு உரித்துப் பெற மாட்டார்.

12. ஓய்வூதியக் கணக்குகளுக்கு ஊழியர்கள் சார்பாக தொழில்தருநர்கள் பங்களிப்புச் செய்யும்போது நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வழங்கப்படும். குழும சுயதேவைக் கடன் வசதிகளுக்கு சாதாரண வட்டி வீதத்தின் 1% கழிவு செய்யப்பட்ட வட்டி வழங்கப்படும். (ஊழியர்கள் சார்பாக தொழில்தருநர் பங்களிப்புச் செய்யும் வரை மட்டுமே இக் கழிவு வழங்கப்படும்.)

13. இந்தக் கணக்கு வைப்பாளர்கள் வங்கியிலிருந்து பெறும் எந்தவொரு கடன் தொகைக்கும் வங்கிக்குச் செலுத்தவேண்டிய செய்முறைப்படுத்தல் கட்டணங்களில் 50% கழிவு பெற உரித்துடையவர்களாக இருப்பார்கள்.

14. கணக்கில் நிலையான தொகை ஒன்றை கிரமமாக வைப்புச்செய்யும் வைப்பாளர்கள் சம்பளத்தை நிரூபிப்பதற்கென வங்கிக்கு சம்பளத் துண்டை வழங்கும் தேவையில்லாது இதன் கீழ் தரப்பட்டுள்ள வரையறைக்குள் அசையாச் சொத்தின் ஈடொன்றிற்கு எதிராக கடன்களைப் பெற முடியும்.

| | | | |
|---|---|---|---|
| 01 வருடத்திற்கு கிரமமான மாதாந்த பங்களிப்பு | 02வருடங்களுக்கு கிரமமான மாதாந்த பங்களிப்பு | 03வருடங்களுக்கு கிரமமான மாதாந்த பங்களிப்பு | 04வருடங்களுக்கு கிரமமான மாதாந்த பங்களிப்பு |
| தவணைவைப்புகளின் 02 மடங்கு வரையான கடன் தவணைகள் | தவணை வைப்புகளின் 03 மடங்கு வரையான கடன் தவணைகள் | தவணைவைப்புகளின் 04 மடங்கு வரையான கடன் தவணைகள் | தவணைவைப்புகளின் 05மடங்கு வரையான கடன் தவணைகள் |

- ❖ பத்து வருடங்களை அடிப்படையாகக் கொண்டு கடன் தவணைகள் தீர்மானிக்கப்படும்

15. NSB பென்சன் + ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வரும் கணக்கு வைப்பாளர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய மருத்துவ மீளளிப்புத் திட்டத்திற்கு உரித்துப் பெறுவார்கள்.

(i) அங்கத்தினரின் மருத்துவச் செலவுகள் மட்டுமே மீளளிக்கப்படும்.

(ii) 55 வயது வரை மட்டுமே மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படும்.

| கணக்கு இலக்கம் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(iii) கணக்கு வைப்பாளர்கள் தமது கணக்குகளில் மொத்தப் பங்களிப்பாக மிகக் குறைந்த தொகையாக ரூபா50,000/-ஐ மருத்துவ மீளளிப்பிற்குத் தகுதி பெறுவதற்கு அல்லது அதற்குமதிகமான மீதியை வைத்திருக்க வேண்டும்.மருத்துவச் செலவுகளை மீளப் பெறும் திட்டத்திற்கு தமைமை பெறுவதற்கு இக் கணக்கில் இந்த மொத்த பங்களிப்பு 12 மாதங்களுக்குப் பேணப்பட்டடிருக்க வேண்டும்.

(iv) பின்வரும் தீவிர சுகயீனங்கள் மட்டுமே மருத்துவச் செலவுகளை மீளப்பெறும் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படும்.

- இருதய சத்திர சிகிச்சை / சிகிச்சை
- மூளை சத்திர சிகிச்சை / சிகிச்சை
- சத்திர சிகிச்சை / புற்று நோய்க்கான சிகிச்சை
- முற்றிலுமான பார்வையின்மை
- சிறுநீரக மாற்று சிகிச்சை

(v) இக் கணக்கை ஆரம்பிக்கும்போது அங்கத்தினர் அவரது அறிவிற்கேற்ப மேலேயுள்ள எந்த ஒரு வியாதியினாலும் பாதிக்கப்பட்டிருக்கவில்லையென்பதை வெளிப்படுத்த வேண்டும்.

(vi) அங்கத்தினர் மேலேயுள்ள வியாதிகளினால் பாதிக்கப்பட்டிருந்தது வங்கிக்கு பின்னர் தெரியவருமாயின் மருத்துவச்செலவுகள் மீளளிக்கப்பட மாட்டாது.

(vii) மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்பட்டதன் பின்னர் இவ் விடயம் வங்கிக்குத் தெரியவருமாயின், அங்கத்தினரின் பங்களிப்பிலிருந்தும் அதற்குத் திரண்டிருந்த வட்டியிலிருந்தும் அத் தொகை செலவு செய்யப்பட வேண்டும்

(viii) மருத்துவச் செலவுகளை மீளப் பெறுவதற்கான உரித்து பின்வருமாறு கணக்கிடப்படும்

| வைப்பாளரினால் வைப்புச் செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூபா | காப்பீட்டு உரித்து ரூபா |
|---|---|
| 50,000/- | 100,000/- |
| 150,000/- | 200,000/- |
| 200,000/- | 300,000/- |
| 500,000/- | 750,000/- |
| 700,000/- அல்லது அதிகம் | 1,000,000.- |

(ix) வைப்பாளர்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை மட்டுமே மருத்துவச் செலவுகளை மீளப்பெறுவதற்கு உரித்துடையவர்களாக இருப்பார்கள். (05 வருடங்களுக்குள் ஒரு முறைக்கும் அதிகமாக உரித்துக்களைக் கோர முடியாது

(x) மருத்துவச் செலவுகள் அனைத்திற்கும் மருத்துவக் கட்டண பட்டியல்கள் ஆதாரமாக இணைக்கப்பட வேண்டும்.

(xi) சகல மருத்துவக் கோரல்களும் 06 மாதங்களுக்குள் சமரப்பிக்கப்பட வேண்டும். 06மாதங்களின் பின்னர் சமர்ப்பிக்கப்படுபவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

(xii) ஓய்வூதியப் பணத்திலிருந்து மருத்துவ மீளளித்தலாக வழங்கப்படும் பணம் கழிக்கப்பட மாட்டாது.

(xiii) இரு மருத்துவக் கோரல்களுக்கிடையில் மிகக்குறைந்தது 24மாத கால இடைவெளி இருத்தல் வேண்டும்.

(xiv) அங்கத்தினர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய திகதி – மீளளித்தல் திகதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.முழுமையான பார்வை இழப்பாக இருப்பின் வைத்தியர் பார்வை இழப்பை உறுதிப்படுத்திய திகதி மீளளிப்புத் திகதியாக ஏற்றுக் கொள்ளப்படும்.

(xv) மருத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவரினால் இவ் உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

| கணக்கு இலக்கம் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

16. மேலேயுள்ள நிபந்தனைகளில் எவையும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்யப்படக் கூடியவை.
இதனகத்தே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் வாசித்தும் விளங்கிக் கொண்டும் இருக்கின்றேன் என்றும் பிரிவு (15) (iv) இன் கீழ் குறிப்பிட்டுள்ள எந்தவொரு வியாதியினாலும் நான் அறிந்தவரையிலும் நான் பாதிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் மேலே சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு அதற்குக் கட்டுப்படுவேன் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்து கின்றேன்.

மேலும், மேலேயுள்ள நிபந்தனைகள் உள்ளடங்கிய ஆவணத்தின் பிரதி ஒன்றை நான் பெற்றுக் கொண் டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………… ……………………………….
வைப்பாளரின் கையொப்பம் திகதி

கணக்கு வைப்பாளரின் பெயர் ………………………………………

தே.அ.அ. இல : ……………………… அதிகாரமளிக்கும் அதிகாரி……………..

**வரைவிலக்கணம்** :

- நிறையேற்றிய வைப்பு வீதங்களின் மாதாந்த சராசரி ஆறு கலண்டர் மாதங்களுக்கு இலங்கை மத்திய வங்கயினால் வெளியிடப்பட்ட நிறையேற்றப்பட்ட சாதாரண வைப்பு வட்டி வீதங்களின் மாதந்த சராசரி

- வெளிநாட்டு நாணயத்தில் பணமனுப்புதல்-

  ஒவ்வொரு நாணயங்களுக்கும் 06கலண்டர் மாதங்களுக்கு, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட மாதாந்த வாங்கும்வீத சராசரியின் மூலம் நாணயமாற்று வீதம் தீர்மானிக்கப் படும்.
- சாதாரண வெளிநாட்டு நாணய சேமிப்புக் கணக்குகளின் வட்டியுடன், விளிம்புவீதமும் சேர்க்கப்பட்டு, அதன் அடிப்படையில் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் வட்டி கணக்கிடப்படுகின்றது. 06 மாதங்களுக்கு ஒரு முறை இது மீளாய்வு செய்யப்படும்.

- இலங்கை மத்திய வங்கி குறித்த ஆதார வீதங்களை (AWDR நாணயமாற்று வீதம்) வெளியிடுவதை நிறுத்துமாயின் அல்லது கிடைக்காதிருப்பின் வங்கி முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படும் ஒப்பீட்டு வீதமொன்று விதிக்கப்படும் உ+ம் AWDR நாணயமாற்று வீதம்

- ஒவ்வொரு ஆண்டிலும் 15மார்ச் இலிருந்து 14செப்ரம்பர் வரையிலும் 15செப்ரெம்பர் இலிருந்து 14மார்ச் வரையிலும் என்றவாறு 06 மாத காலங்கள் கணக்கிடப்படும்.

**சகல வைப்புக்களும் அதற்கான வருவாய்களும் இலங்கை அரசாங்கத்தினால் முழுமையாக உத்தரவாதமளிக்கப்பட்டவை.**